இணைப்பு

(519 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மின்வாரிய நிதிநிலை அறிக்கை, 2001–2002, 2002–2003 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 2000–2001, 2001–2002

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 2001–2002 மற்றும் 2002–2003 ஆகிய இரு ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கைகளும், 2000–2001 மற்றும் 2001–2002 ஆகிய இரு ஆண்டுகளுக்கான திருத்திய மதிப்பீடுகளும் 1948 ஆம் ஆண்டு மின்சார(வழங்கல்) சட்டத்தின் 61–ம் பிரிவின்படி சட்டப்பேரவையில் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் 15 அம்சத் திட்டத்தில், எரிசக்தி பாதுகாப்பு ஒரு முக்கிய அம்சமாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிகு தலைமையின்கீழ் நுகர்வோருக்குப் போதுமான அளவிற்கு மின்சாரத்தை வழங்கிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. கடந்த 2000–2001 ஆம் ஆண்டில் 3342 கோடி யூனிட்டுகளாக இருந்த மின் நுகர்வு 2001–2002 ஆம் ஆண்டில் 3519 கோடி யூனிட்டுகளாக அதிகரித்துள்ளது.

முதன்முறையாக ஒரே சமயத்தில் தூத்துக்குடி, மேட்டூர், வடசென்னை ஆகிய மூன்று அனல் மின் நிலையங்களும், 2001–02 ஆம் ஆண்டில் மிக நன்றாகச் செயல்பட்டமைக்காக, இந்திய அரசின் தங்கப்பதக்கம் பெறுவதற்கான தகுதியினைப் பெற்றுள்ளன என்ற தகவலை இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

தென்மேற்குப் பருவமழை பொய்த்ததாலும், மேட்டூர் அணைக்கு காவிரி நதி மூலமாக நீர்வரத்து குறைந்ததாலும், 2002–03 ஆம் ஆண்டு புனல் மின் நிலையங்களின் மின்சார உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்பட்டது. இதனால் 250 கோடி யூனிட்டுகள் மின் உற்பத்தி இழப்பு ஏற்பட்டது. இவ்விழப்பின் மதிப்பீடு ரூ. 625 கோடியாகும். இது தவிர, நெய்வேலி அனல் மின் நிலையம்–II-ல் செப்டம்பர், 2002ல் ஏற்பட்ட மிகப்பெரிய தீ விபத்தினால் 1470 மெகாவாட் மின் திறன் உற்பத்தி ஒரு மாத காலத்திற்கும் மேலாக நிறுத்தப்பட வேண்டிய நிலை நேரிட்டது.

[2002 அக்டோபர் 28

அக்டோபர், 2002 முதல் வாரத்தில், நெய்வேலி அனல் மின் நிலையம்–II மின் உற்பத்தியை மீண்டும் துவக்கியுள்ளது.

நடப்பு நிதியாண்டில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் கட்டமைப்பில் 572 மெகாவாட் அளவிற்கு மின் உற்பத்தி கூடுதலாக்கப்படும். இராமநாதபுரம் மாவட்டம், வழுதூரில் (பெருங்குளம்) நிறுவப்பட்டுள்ள 95 மெகாவாட் மின் திறனுள்ள எரிவாயு சுழலி மின் திட்டம் மார்ச், 2003—க்கு முன் இயங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வரும் டிசம்பர், 2002—ல் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின்கீழ் செயல்படும் நெய்வேலி அனல் மின் நிலையம்–I விரிவாக்கத் திட்டத்தின்கீழ் ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட இரு பிரிவுகள் கூடுதலாகச் செயல்படத் தொடங்கும். இவ்விரிவாக்கத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு 227 மெகாவாட் மின்சாரம் பங்காகக் கிடைக்கும்.

நெய்வேலியில் எஸ்.டி.சி.எம்.எஸ். எனும் தனியார் நிறுவனத்தின் பழுப்பு நிலக்கரியை எரிபொருளாகக் கொண்டு இயங்கும் 250 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் உற்பத்தி நிலையமும் டிசம்பர் 2002—ல் இயங்கத் தொடங்கும். மேற்கண்ட கூடுதல் மின் உற்பத்தியைத் தவிர, 2002 நவம்பர் முதல் கிழக்குப் பிராந்தியத்திலிருந்து சுமார் 250 மெகாவாட் கூடுதல் மின்சாரம் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும்.

கடந்த 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.1091 கோடி செலவில் தமிழ்நாடு மின்சார வாரியம் திட்டப் பணிகளைச் செயல்படுத்தியது. தமிழ்நாடு மின்சார வாரியம் 60 புதிய துணை நிலையங்களையும், சுமார் 800 சுற்று கி.மீ. மிக உயரழுத்த/உயரழுத்த மின் கம்பிகளை 2001–2002ல் நிறுவியுள்ளது. நடப்பு நிதியாண்டில், ரூ.1209 கோடி செலவில் திட்டப் பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தில் 60 புதிய துணை மின் நிலையங்கள் மற்றும் 800 சுற்று கி.மீ. மிக உயரழுத்த/உயரழுத்த மின் கம்பிகள் ஆகியவற்றை நிறுவும் பணி உள்ளடங்கும். தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 2002–03 முதல் 2006–07 ஆண்டு காலத்திற்கான பத்தாவது திட்ட மதிப்பீடு ரூ.8000 கோடியாகும்.

தமிழ்நாடு மின்சார வாரியம் விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்படுத்தல் மற்றும் சீரமைப்புத் திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர்(தெற்கு), விழுப்புரம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மின் பகிர்மான வட்டங்களில் மின் விநியோக மேம்பாட்டிற்காக ரூ.250 கோடி மதிப்பீட்டில் திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது. இத்துடன் தமிழ்நாடு மின்சார வாரியம், விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்படுத்தல் மற்றும் சீரமைப்புத்

2002 அக்டோபர் 28]

திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட ஆறு நகர்ப்புறங்களில் மின் விநியோக மேம்பாட்டிற்காக ரூ.149 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களையும் மேற்கொள்ளவிருக்கின்றது:

1. கோயம்புத்தூர் பெருநகரம்

2. சேலம் நகரம்

3. ஈரோடு நகரம்

4. செங்கல்பட்டு வட்டம்

5. மதுரை பெருநகரம்

6. திருநெல்வேலி நகரம்

தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரகக் கட்டமைப்பு நிதி உதவியோடு தமிழ்நாடு மின்சார வாரியம் ரூ.155 கோடி மதிப்பீட்டில் பல மின் பகிர்மான வட்டங்களில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தின் மூலம் இராமநாதபுரம், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் ரூ.38.24 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதம மந்திரியின் கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மின்சார வாரியம், திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் பகுதி, நீலகிரி மற்றும் வேலூர் மின் பகிர்மான வட்டங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் ரூ.29.719 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கடந்த 2001–2002 நிதியாண்டில் தமிழ்நாடு மின்சார வாரியம் 8 இலட்சம் புதிய மின் இணைப்புகளை வழங்கியுள்ளது. நடப்பாண்டிலும் மேலும் 8 இலட்சம் புதிய மின் இணைப்புகள் அளிக்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் வழிகாட்டுதலின்பேரில் தமிழ்நாடு மின்சார வாரியம் மின் நுகர்வோருக்குத் தொடர்ந்து சிறப்பான சேவை நல்கும் என்று உறுதி கூறி அமர்கிறேன்.